செ.வெ.எண்: 72 நாள்: 25.11.2016

# புதுக்கோட்டையில் இந்திய அரசமைப்பு நாள் உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அரசு அலுவலர்களும் எடுத்துக்கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் அனைத்து அரசு அலுவலர்களும் இந்திய அரசமைப்பு நாள் உறுதி மொழி ஏற்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.11.2016) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இந்திய அரசமைப்புநாள் உறுதிமொழியான "இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டின் இறையாண்மையையும், சமநலசமுதாயமும், சமயச்சார்பின்மையும், மக்களாட்சி முறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும், அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் நீதி, எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை, சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை ஆகியவற்றை எய்திடச்செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டு மக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும், உள்ளார்ந்த உறுதியுடையராய் நம்முடைய அரசமைப்புப் பேரவையில் 1949 நவம்பர் 26ம் நாளினை ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்சி, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்" என வாசிக்க அனைத்து அரசு அலுவலர்களும் இந்திய அரசமைப்பு நாள் உறுதி மொழியினை எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.அன்பழகன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**